**தலைப்பு 425 - நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்தி மற்றும் உயர்தொழிநுட்ப இராஜாங்க அமைச்சு**

---

1. **நிதிக்கூற்றுக்கள்**

1.1 **அபிப்பிராயம்**

நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்தி மற்றும் உயர்தொழிநுட்ப இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்தி மற்றும் உயர்தொழிநுட்ப இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2021 ஆகஸ்ட் 02 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 நவம்பர் 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்தி மற்றும் உயர்தொழிநுட்ப இராஜாங்க அமைச்சின் நிதிக் கூற்றுக்களினுள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது

பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல்,தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ) பிரிவின் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்தி மற்றும் உயர்தொழிநுட்ப இராஜாங்க அமைச்சானது புதிய அமைச்சு என்பதனால்

முன்னைய ஆண்டிற்கு தொடர்புடையதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு காணப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| **(அ)** 06 மூலதன செலவின விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 610,000 ஆன நிதியேற்பாடு மற்றும் 02 மீண்டெழும் செலவின விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 475,000 ஆன நிதியேற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | கொவிட் 19 தொற்று நிலைமையினால் தேவைகள் ஏற்படாமை, செலவினங்கள் கட்டுப்படுத்தப்படலினால் சேமிக்கப்பட்டமை, புதிய அமைச்சு என்பதனால் கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக தேவைகள் ஏற்படாமை, கொள்வனவு நடவடிக்கைகளுக்காக கொவிட் தொற்றினால் காலம் போதுமானதாக காணப்படாமை மற்றும் உபகரணங்களின் விலைகள் அதிகரித்தமை காரணமாக கொள்வனவு செய்யப்பட முடியாமை போன்ற காரணங்கள் குறிப்பிடப்பட்டிருந்தது. | நி.பி 50 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |
| **(ஆ)** 05 மூலதன செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டில் 25 சதவீதத்திற்கு அதிகமாக மற்றும் 27 மீண்டெழும் செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டில் 10 | கொவிட் 19 தொற்று நிலையின் காரணத்தினால் செலவினம் மட்டுப்படுத்தப்படல் மற்றும் செயற்திட்டம் செயற்படுத்தப்படாமை/ செயற்படுத்த முடியாமது போனமை. | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| சதவீதத்திற்கு அதிகமாக நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அவ் மூலதன மற்றும் மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாடு ரூபா 540,639,500 ஆக காணப்பட்டதுடன் அதில் ரூபா 316,990,917 ஆன நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | | |
| **(இ)** 425-2-3-8-2506 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் பொருளாதார மத்திய நிலையம் ஸ்தாபிப்பதற்கான மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு ரூபா 343,000,000 ஆக காணப்படுகின்றதுடன் அதில் ரூபா 1,310,500 ஆன தொகை நி.பி 66 இன் கீழ் வேறு செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் அதன் பின்னரும் இந்த செலவின விடயத்தில் சேமிப்பு ரூபா 266,498,342 ஆன தொகை, அதாவது 77 சதவீதமாக காணப்பட்டது. | திட்டமிடப்பட்ட வேலைத் திட்டங்கள் கொவிட் 19 தொற்றினால் செயற்படுத்தப்படுவதற்கு முடியாது போனது. | -மேற்படி- |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படுதல்

---------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| **(அ)** ஆண்டிற்குரிய ரூபா 309,238 ஆன பொறுப்புக்கள் நிதிக் | கைதவறுதலாக பொறுப்புக்கள் கூற்றிற்கு | பொறுப்புக்களின் பெறுமதி |

| | | | |
|---|---|---|---|
| | கூற்றுக்களில் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான கூற்றிற்கு (குறிப்பு இல III) உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் சரியாக குறிப்பிடப்படுவதற்கு குறித்துக் கொள்கின்றேன். | கணிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| **(ஆ)** | மீளாய்வாண்டில் அமைச்சின் 3 செலவின விடயங்களின் கீழ் ஒதுக்கப்பட்டடிருந்த ரூபா 2,000,000 ஆன தேறிய நிதியேற்பாட்டில் ஆண்டினுள் ரூபா 1,894,223 பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பு ரூபா 105,777 ஆக காணப்பட்டது. அச் சேமிப்பினை மிகைத்து ரூபா 2,913,777 ஆன பொறுப்புக்களுக்கு உடன்பட்டிருந்தது. | **I.** 425-02-3-003-2201 – எதிர்காலத்தில் அவ்வாறு ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்கின்றேன்.<br>**II.**425-01-01-10-2001 – புதிய அமைச்சாக ஸ்தாபிக்கப்பட்டமையினால் தேவையான நடவடிக்கைகளுக்கான கடப்பாடுகளுக்கு உடன்படல் வேண்டும்.<br>**III.** 425-01-01-0-1409 – நி.பி 94 பிரகாரம் கடந்த 3 ஆண்டுகளின் நிதியேற்பாடுகளில் சாதாரணமாக 50 % இனை மிகைக்காத கடப்பாடுகளுக்கு உடன்பட முடிதல் | நி.பி 94 இற்கு முரணாக நிதியேற்பாட்டினை மிகைத்து பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல் கூடாது. |

## 2.3 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நி.பி 371 (5) பிரகாரம் பணி நிறைவடைந்து 10 நாட்களினுள் பெற்றுக் கொள்ளப்பட்ட தற்காலிக இடைக்கால கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சின் 3 உத்தியோகத்தர்களினால் 8 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 185,887 ஆன இடைக்கால கட்டுநிதி தீர்ப்பதற்காக 12 நாட்கள் தொடக்கம் 26 நாட்கள் வரையான கால வீச்சு எடுக்கப்பட்டிருந்தது. | கொவிட் 19 தொற்று காலத்தில் உத்தியோகத்தர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட தற்காலிக இடைக்கால தீர்ப்பதற்காக அரச விடுமுறை திகதியாக காணப்பட்டமையினால் தீர்ப்பனவு தாமதமாகியுள்ளது. தொடர்படைய உத்தியோகத்தர்களுக்கு இது தொடர்பாக தெரிவிக்கிறேன். | நி.பி 371(5) ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.4 கட்டுநிதி மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| நிதி கூற்றுக்களில் ஏசீஎஸ் - 3 மாதிரியில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் 2020 திசெம்பர் 31 இற்கு மாற்றப்பட்டிருப்பினும் திறைச்சேரி புத்தகங்களில் காண்பிக்கப்படாத காசு மீதி 56,218,580 ஆக காணப்பட்டது. அம் மீதி நிதி நிலைமைக் கூற்றில் நிதிச் சொத்துக்களின் கீழ் நிகழ்நிலை காசாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சு அவ்வாறு காண்பித்திருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள விதம் சரியானதாகும். காசுப் புத்தகத்தின் ஊடாக 2020/12/31 திகதியன்று திறைச்சேரி கணக்கு தீர்க்கப்பட்டுள்ளதுடன் அதன் அறிக்கையிடல் மேற்கொள்ளப்படுவது அதற்கு பின்னரான மாதத்தில் திறைச்சேரி கணினி பிரதியின் பிரகாரமாகும். நிதி நிலைமை கூற்று அமைச்சின் புத்தகங்களின் பிரகாரம் தயாரிக்கப்படும் என்பதனால் அது மேற்கொள்ளப்பட்டுள்ள விதம் சரியானதாகும். ஏசீஏ 3 இல் திணைக்கள புத்தகங்கள் மற்றும் திறைச்சேரி புத்தகத்தின் இடையில் வேறுபாடொன்று காணப்படுகின்றது. இந்த பெறுமதி காண்பிக்கப்பட்டது அதன் பிரகாரமாகும். | நிதிக் கூற்றுக்களில் நிதிச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்படல் வேண்டும். |

## 2.5 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

அமைச்சினால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| **பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு**<br>நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடொன்று | எதிர்காலத்தில் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்களை நாளாந்தம் பரிசீலனை செய்யக்கூடிய |

| | | |
|---|---|---|
| பேணப்பட்டிருக்கவில்லை. | | முறையில் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேட்டில் அந்த பொறுப்புக்கள் பதிவு செய்யப்பட வேண்டும். |

## 2.6 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்க கூற்று

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | திறைச்சேரி இறுதி கணினி அச்சு குறிப்பின் பிரகாரம் ரூபா 1,881,271 ஆன அரச உத்தியோகத்தர்களின் முற்பண கொடுப்பனவு மற்றும் ரூபா 1,755,756 ஆன குறுக்கு பதிவின் ஊடாக கொடுப்பனவு கணக்கிடப்பட்டிருப்பினும் அப் பெறுமதி திணைக்கள புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் தொடக்கம் திசெம்பர் வரை கமத்தொழில் அமைச்சினால் கணக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் போது அவ் அமைச்சின் முற்பண பீ கணக்கிற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய கணக்கிடல்கள் இந்த அமைச்சின் முற்பண பீ கணக்கின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தமையினால் இந்த அமைச்சின் புத்தககங்களுக்கு உள்ளடக்கப்படவில்லை. | திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| **(ஆ)** | திறைச்சேரி இறுதி கணினி குறிப்பின் பிரகாரம் ஆண்டினுள் அரச உத்தியோகத்தர்களின் முற்பண பணத்தில் பெறுவனவு ரூபா 1,898,461 மற்றும் குறுக்கு பதிவின் ஊடான பெறுவனவு ரூபா 1,266,421 ஆக காணப்படினும் அப் பெறுவனவு திணைக்கள புத்தகங்களுக்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| **(இ)** | மேற்படி (அ) மற்றும் (ஆ) அவதானிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகள் | தற்போது கொவிட் தொற்று நிலைமையினால் பல உத்தியோகத்தர்கள் கடமைக்கு | தொடர்புடைய பதிவேடுகள் கணக்காய்விற்கு |

| | | | |
|---|---|---|---|
| கணக்கிடப்படுவதற்கு தொடர்புடைய மாற்றல் பதிவு, கணக்கு பொழிப்பு ஆகிய பதிவேடுகள் ஏதும் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | சமூகமளிக்காத காரணத்தினால் எதிர்காலத்தில் முன்வைக்கின்றேன். | முன்வைக்கப்படல் வேண்டும். |

## 2.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

| அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவை (அ) நி.பி 427** | திணைக்கள கணக்கு புத்தகங்கள் திறைச்சேரி புத்தகங்களுடன் இணக்கம் செய்யப்பட்டு மாதாந்தம் திறைசேரியின் அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் அமைச்சின் புத்தகங்கள் திறைச்சேரி பத்தகங்களுடன் இணக்கம் செய்யப்பட்டு மாதாந்தம் அறிக்கை முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் உரிய வண்ணம் இணக்க அறிக்கை முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | நிதி பிரமாணத்தின் பிரகாரம் இணக்கம் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) நி.பி 1646 | அமைச்சிற்குரிய 14 வாகனங்களுக்கு தொடர்புடைய நாளாந்த ஓட்டக் குறிப்பு பயணம் தொடர்பான மாதாந்த பொழிப்பறிக்கையின் அசல் பிரதியுடன் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் அமைச்சிற்குரிய வாகனங்களுக்கு தொடர்புடைய ஓட்டக் குறிப்புக்கள் | எதிர்காலத்தில் உரிய வண்ணம் ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | நிதி பிரமாணத்தின் பிரகாரம் வாகனங்கள் நாளாந்த ஓட்ட குறிப்பு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | |

## 2.8 வங்கி கணக்குகளை செயற்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டின் ஒக்தோம்பர், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்கு தொடர்புடையதாக தயாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட வங்கி கணக்கிணக்க கூற்று கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் ஒக்தோம்பர், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்கு தொடர்புடையதாக தயாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட வங்கி கணக்கிணக்க கூற்று விரைவாக முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | உறுதிப்படுத்தப்பட்ட வங்கி கணக்கிணங்க கூற்றுக்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| ஹெல சுக முறையினை பயன்படுத்தி 10,000 ஹேக்கர் பயிர் செய்து 18,000,000 கிலோ பாரம்பரிய நெல் கிராம் விளைச்சலினை பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்பில் முன்னோடி செயற்திட்டமொன்று மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதற்காக தேவையான விதை நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு மற்றும் ஹெல சுக பயிர்செய்கைக்கு தேவையான மருந்தியல் திரவம் கொள்வனவு செய்வதற்கு ரூபா 82.6 மில்லியன் நிதியேற்பாடு | இந்த செயற்திட்டத்தின் ஊடாக ஒரு ஹெக்டருக்கு பெறக்கூடிய சாதாரண விளைச்சல் 1,546 கி.கிராம் ஆகும். எனினும் இந்த பெறுமதி 2018 ஆம் ஆண்டில் தேசிய நெல் விளைச்சலின் சாதாரண பெறுமதியான ஒரு ஹெக்டருக்கு 4,443 கி.கிராம் உடன் ஒப்பிடும் போது இந்த செயற்திட்டத்திலிருந்து பெறப்பட்ட விளைச்சல் ஒப்பிட்டளவில் மிக குறைந்த மதிப்பினை கொண்டமை தெரிகின்றது. | பரிசோதனை அல்லது செயல்முறை செயற்திட்டமொன்று செயற்படுத்தும் போது அதன் இலக்குகள் நடைமுறையில் காணப்பட வேண்டியதுடன் சட்ட ரீதியான தடைகள் காணப்படல் கூடாது. உள்ளீடுகள் மற்றும் வெளியீடுகளை ஒப்பிட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட |

| | | |
|---|---|---|
| கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அந் நிதியேற்பாட்டில் ரூபா 13 மில்லியன் செலவிடப்பட்டு பயிச்செய்கை செய்யப்பட்டிருந்தது, 3,153 ஹேக்கரில் மட்டுமாவதுடன் அதில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த விளைச்சல் 1,9744,359 கிலோகிராம் ஆகும். | | தீர்மானத்தின் அடிப்படையில் செயற்திட்டத்தின் வெற்றி, தோல்வி தொடர்பான உறுதியான தீர்மானம் எடுத்தல் வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| அமைச்சினால் மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,577,267 ஆன நிதியல்லாச் சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டு அதற்குரிய குறியீடுகள் வழங்கப்பட்டு அச் சொத்துக்கள் பிரதான பேரேட்டு கணக்கின் கீழ் (ஏசீஏ 6 மாதிரியில்) கணக்கிடப்பட்டிராதிருந்ததுடன் நிதி நிலைமை கூற்றிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | கைதவறுதலாக 2020 திசெம்பர் மாதத்தின் சொத்துக்கள் கணக்கிடப்பட்டிராததுடன் 2021 ஆம் ஆண்டின் சனவரி மாதத்தில் கணக்கிடப்பட்டுள்ளது. | நிதி அல்லாச் சொத்துக்களின் பெறுமதிகள் கணிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |